[1979 பிப்ரவரி 14

தேனி வளர்ப்புத் திட்டம்

*வினா எண்.— 56 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேனி வளர்ப்புத் திட்டம், தற்போது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது?

(ஆ) தேனி வளர்ப்பு பணியாளர்கள் வேறு பணிகளுக்கு பயன்படுத்தித் கொள்ளப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தற்போது தேனீ வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தால், நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ் வாரியம் இதுவரை சுமார் 1,71,000 தேனீப் பெட்டிகளேயும், சிறப்புத் திட்டங்களான மலைப்பகுதி மற்றும் மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டங்களின் கீழ் சுமார் 8,000 தேனீப் பெட்டிகளேயும் வழங்கியுள்ளது. தேனீக் குடும்பங்களை நல்ல முறையில் பேணி வரவும், விஞ்ஞான முறையில் தேன் எடுப்பதற்கும் தேவையான தொழில் நுட்ப உதவியை இவ்வாரியமும் அளித்து வருகிறது. தேனீ வளர்ப்போர் உற்பத்தி செய்யும் தேனை இவ்வாரியம் தேனீ வளர்ப்பு நிலையங்கள் மூலமும், மூலதனத் தொகை கொடுக்கப்பட்டு இதற்கென பதிவு செய்யப்பட்ட தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் மூலமும் கொள்முதல் செய்து உதவி வருகிறது.

(ஆ) தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாரியத்தில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள தேனீ களப்பணியாளர்கள் வேறு எந்த மாற்றுப் பணியிலும் ஈடுபடுத்தப்படுவதில்லை. தீபாவளி பண்டிகை கதர் விற்பனையின்போது மட்டும் அவர்களது சேவை கதர் விற்பனைக்காக சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, தேனீ வளர்ப்புப் பணியாளர்கள் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற காரணத்தாலே ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே புது திட்டங்கள் வந்தால் அவற்றிற்காக அவர்களைப் பயன்படுத்துகிற நிலையிருக்கிறதே தவிர, தேனீ வளர்க்க ஊக்குவிக்கும் திட்டத்திற்காக அவர்கள் பயன்படுத்தப் படவில்லை. மீன் வளர்ப்பு புதிதாக வந்தால் மீன் வளர்ப்புக்கு அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். அதே போல், புதிய திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, தேனீ வளர்ப்புக்கு, அதனை ஊக்குவிக்க பயன்படுத்தப்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா? ஆகவே, அந்த நிலையை மாற்றி, உண்மையாக தேனீ வளர்ப்புக்கு அவர்களை ஊக்குவிப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 89 பேர் வாரியத்தால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-78 ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட ரூ. 1,03,000 மதிப்புள்ள தேனை உற்பத்தி செய்கின்ற பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் பல்வேறு பணிகளிலே இயற்கையாக அவர்களை ஈடுபடுத்த முடியாது. ஆனால், கதர் விற்பனையின் பொழுது அவர்களது பணி சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது என்பது தான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரத்தில் மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண். 57—திரு. அ. ப. பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் உள்ள ஒட்டன்சத்திரத்தில் ஒரு பொது ஆஸ்பத்திரி (General Hospital) கட்ட 1970-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், ஆஸ்பத்திரி கட்ட நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

மருத்துவக் கல்லூரிகள்.

*வினா எண். 58—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரிகள், அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் முறையே எத்தனை?

(ஆ) அரசு கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுப்பதைப் போலவே தனியார் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

(இ) இல்லை என்றால் அதற்கான காரணம் யாது?

(ஈ) தனியார் கல்லூரிகளுக்கு மான்யம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?